**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>அ.வ எண்: 231/2024 (வாசா.1 – மதன் மோகன்) தேதி: 03.02.2026.</u>**

**<u>வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 5, 13, 18, 20, 22, 24, 29, 42, 45, 55, 59, 63 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எனது பெயர் உள்ளது என்றால் சரிதான். நாடார் உறவின் முறை சங்கத்தில் இருந்து நீக்கம் செய்யப்பட்ட நபர்கள் தரப்பில் உயர்நீதிமன்றத்தில் நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவில் வழங்கப்பட்ட உத்தரவுதான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரியல்ல. நான் உறவின்முறை சங்கத்தில் இருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து நான் உட்பட 7 நபர்கள் உயர்நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தோம் என்றாலும் அதில் மாவட்ட பதிவாளரை அனுகும்படி உத்தரவு வழங்கப்பட்டது என்றாலும் சரியல்ல. என்னை நீக்கம் செய்தது சம்பந்தமாக இதுவரை பாளையங்கோட்டை மாவட்ட பதிவாளரை நான் அனுகவில்லை என்றால் சரிதான். 2022ம் வருடம் நடைபெற்ற உறவின் முறை சங்க தேர்தலில் 25.12.2022 தேதியில் நான் வாக்களித்தேன் என்றால் சரிதான். அந்த தேதியில் சங்க தேர்தல் நடைபெறும் என்ற விவரம் தெரிந்துதான் வாக்களிக்க சென்றேன் என்றால் சரிதான். சங்க தேர்தலில் ஓட்டு கேட்டு அனைவரும் எங்கள் வீடு தேடி வந்தார்கள், அந்த அடிப்படையிலும் சங்க

உறுப்பினர் என்ற அடிப்படையிலும் வாக்களிக்க சென்றேன். அந்த தேர்தல் சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடந்ததால்தான் நான் சென்று வாக்களித்தே் என்றால் சரியல்ல. சட்டப்படி நடந்த தேர்தலுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**: இதர தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,

சார்பு நீதிபதி,
கோவில்பட்டி